**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 111 /2021 PW1**

10.03.2026 **வா..சா.1 ருக்மணி (எ) மணியம்மாள் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

23.08.2005ந் தேதி என் மகன் ராஜேந்திரனுக்கு அமுலு, முனியம்மாள் ஆகிய இருவரும் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 12.03.2012ந் தேதி எனது அம்மா எனது மகன் ராஜேந்திரனுக்கு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் ஒன்று எழுதினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் 1, 2 பிரதிவாதிகளின் வாரிசுதாரர்களான 4 முதல் 6 பிரதிவாதிகள் பயிர் வைத்து சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது மகன் ராஜேந்திரனை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா எனது மகனுக்கு எழுதி வைத்த 23.08.2005 மற்றும் 12.03.2012 தேதியிட்ட இரண்டு கிரையப் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தில் தான் நான் பாகம் கோருகிறேன் என்றால் சரிதான். 23.08.2005 தேதியிட்ட கிரைய ஆவணம், 29.02.2012 தேதியிட்ட கிரைய ஆவணம் 29.02.2012 தேதியிட்ட கிரைய ஆவணம், 12.03.2012 தேதியிட்ட கிரைய ஆவணங்களின் 2ம் பக்கத்தில் எனது அப்பாவுக்கு பாகம் பிரிவினை மூலம் கிடைத்த விவரத்தையும் எனது அம்மாவுக்கு உயில் மூலம் கிடைத்த விவரமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளுக்கு தொடர்பில்லாத சங்கதிகளை சொல்லி நான் முதன்மை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதால் அது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயில் ஆவணம் மூலம் எனது அம்மாவுக்கு கிடைக்கப் பெற்று 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எனது அம்மாவால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் விற்கப்பட்ட வழக்கு சொத்தில் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. எனது அம்மாவுக்கு உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தைத்தான் 4 கிரைய ஆணவங்களாக கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அம்மா மற்றும் 3ம் பிரதிவாதி அமுலுக்கு உண்டான பாகத்தை எனது அம்மா எனது மகன் ராஜேந்திரனுக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எனது நிருபண வாக்குமூலத்தில் கண்டள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பொய்யான விவரங்களுடன் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும்,

அதனால் பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.